(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 153.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூன் 09, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1883/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கல்விமாணிப் பட்டமளிக்கும் அரசாங்க கல்வி நிறுவனங்கள் யாவை;

(ii) மேற்படி பட்டமளிப்பிற்கான அரச சார்பற்ற கல்வி நிறுவனங்கள் யாவை;

(iii) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணி பட்டமளிப்பானது ஆசிரியர் சேவைக்கான ஆட்சேர்ப்பின்போது சமமானதாக கருதப்படுகின்றதா;

(iv) இன்றேல், ஏன்;

(v) அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிக் காலப்பகுதியும் உள்ளடக்கமும் சமமானதா;

(vi) இன்றேல், ஏன்;

(vii) குறிப்பிட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான கற்கைநெறியில் செய்முறைக் கற்பித்தலுக்கான பயிற்சி கட்டாயமானதா;

(viii) ஆமெனில், அதற்கான காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1885/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை ஆகிய கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள உள்ளூர் நீர் நிலைகள் அதிகபட்ச ஊட்டச்சத்துக்ககளால் மாசடைந்திருப்பதோடு, பல் வகையான நீர்த்தாவர களைச் செடிகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி மூடப்பட்டிருப்பதையும்;

(ii) அதிகமான வண்டல் படிவு காரணமாக அத்தகைய நீர் நிலைகளின் ஆழம் குறைந்துள்ளதையும்;

(iii) மேற்படி நிலைமை காரணமாக, அந்த நீர் நிலைகளில் நீரைத் தேக்கி வைக்கும் திறன் குன்றி உள்ளதால் மழைக் காலங்களில் வெள்ள அனர்த்தங்கள் அதிகரித்துள்ளதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் நீர் நிலைகளில் வண்டல் படிவு தொடர்பான முறையான மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) வண்டல் மற்றும் ஆக்கிரமிப்பு இன களைச் செடிகளை அகற்றுதல் அத்துடன் நீர்ச் சூழற்றொகுதியை நிலைபேறாக மீளமைப்பதற்கு ஒருங்கிணைந்த வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி பிரதேசங்களில் அத்தகைய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1919/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, எதிரிசிங்க வீதி, கங்கொடவில பிரதேசத்தில் வதியும் அனுமதியற்ற குடும்பங்களை அப்பிரதேசத்திலிருந்து அகற்றி வேறு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அக்குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றுள், வீடுகள் கிடைக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அக்குடும்பங்களுக்கு கொலம்பகே மாவத்தை அல்லது காலிங்க மாவத்தை ஆகிய பிரதேசங்களில் வீடுகளை வழங்காது மாளிகாவத்தை பிரதேசத்தில் வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1924/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் புலம்பெயர் ஊழியர்களின் குடும்பங்களைச் சேர்ந்ததும் பாடசாலை செல்வதுமான பிள்ளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்தத் திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அமுல்படுத்தப்படுகின்றதா;

(iv) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்ற வெளிநாட்டுச் சேவை அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி அலுவலர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு 2-5, 6-10 மற்றும் 11-18 ஆகிய வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(vi) 2025 ஆம் ஆண்டுக்கென வழங்கப்பட்டுள்ள பாடசாலை உபகரணங்களின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில், மேற்படி தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை மேற்படி அ(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் உள்ளதா;

(ii) பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுதல் மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளனவா;

(iii) ஆமெனில், அது தொடர்பில் காணப்படுகின்ற அளவுகோல்கள் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

5.

1926/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் நாகொடை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ‘எப்தோப் தோட்டம்’ அரசாங்கத்தின் காணி என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அந்தக் காணி ஆரம்பத்திலிருந்து இது வரை உரித்து மாற்றம் செய்யப்பட்டுள்ள விதம் யாது;

(iii) மேற்படி காணியின் பரப்பளவு யாது;

(iv) மேற்படி காணியில், இன்றளவில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை யாது;

(v) அத்தகைய குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் காணியின் அளவு யாது;

(vi) காணியில் வசிக்காது, பயிர்ச்செய்கையை மட்டும் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை யாது;

(vii) அத்தகைய நபர்கள் அனுபவிக்கும் காணியின் அளவு யாது;

(viii) மேற்படி காணியின் மாதிரி வரைபடத்தை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காணியினுள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள ஆபத்தான வலயங்கள் காணப்படுகின்றனவா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1931/2026

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முகாமைத்துவத்திற்காகத் தனியார் நிறுவனங்களிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற பெருந்தோட்டங்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) சம்பந்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்களையும் அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ள பெருந்தோட்டங்களின் பெயர்களையும்;

(iii) அத்தகைய ஒவ்வொரு பெருந்தோட்டத்தினதும் குத்தகைக் காலப்பகுதியை வெவ்வேறாகவும்;

(iv) ஒவ்வொரு பெருந்தோட்டத்திலும் சேவையாற்றும் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையை வகைகளின் அடிப்படையிலும்;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீதிகள், தொழிற்சாலைகள் மற்றும் லயன் அறைகள் உட்பட மேற்கூறப்பட்ட ஒவ்வொரு தோட்டத்தினதும் மொத்த நிலப்பரப்பு மற்றும் இலங்கைப் பெருந்தோட்டங்களின் மொத்த நிலப்பரப்பில் அதன் சதவீதத்தையும்;

(ii) கடந்த ஐந்து (05) நிதியாண்டுகளில் ஒவ்வொரு தனியார் நிறுவனமும் ஈட்டிய இலாபம் அல்லது அடைந்த நஷ்டத்தை வெவ்வேறாகவும்;

(iii) இது தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கிடைக்க கூடியதாக உள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அந்நிதிக் கூற்றுக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1938/2026

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1998 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ள முறை யாதென்பதையும்;

(ii) தற்போது நிரந்தர மற்றும் தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தினால் அதிகரிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர் சம்பளத்திற்கு உரித்துடைய தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) சம்பளம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை அந்தத் தரப்பினருக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(v) அதிகரிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை, தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1992/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இணைந்த சேவைகள் வகையின் கீழுள்ள சேவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சேவைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சேவைகளில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை சேவை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பொது நிர்வாகத்துறை முறையாகச் செயற்படுவதற்கு இணைந்த சேவைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாகத் தற்போதைய அரசாங்கம் இதுவரை மேற்கொண்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2022/2026

கௌரவ (கலாநிதி) வீ. எஸ். இராதாகிருஷ்ணன்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறை சார்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகத் வெவ்வேறாக யாது;

(ii) பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) அது தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக இன்றளவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை, மாவட்ட வாரியாகத் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2039/2026

கௌரவ வருண லியனகே,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு கிராமிய வங்கியின் தங்க நகை அடகுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான உரிமம், மக்கள் வங்கியின் வசம் இருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) 2026 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அதன்பின்னர் அந்த உரிமம் பிரதேச செயலாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி உரிமத்தை மீண்டும் மக்கள் வங்கி அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கை கிராமிய கூட்டுறவு வங்கிகளின் சம்மேளனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 6 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2477/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மார்ச் 03 ஆம் திகதிய 2478/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மார்ச் 03 ஆம் திகதிய 2478/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மார்ச் 03 ஆம் திகதிய 2478/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம்,— மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பாக 2025.03.10 மற்றும் 2025.03.21 ஆகிய திகதிகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த விடயங்களை உள்ளடக்கியதான, 2025 ஜூலை 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 243ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடுகளுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் ஏற்பாடுகள், 2026 மே 28 ஆம் திகதியிலிருந்து இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மாலைதீவு குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையிலான 2025, யூலை மாதத்தில் கையொப்பமிடப்பட்ட பொருத்தனை தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106 மற்றும் 78(ஆ) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் ஆக்கப்பட்டு 2026 மார்ச் 12 ஆம் திகதிய 2479/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*20.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

21.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1972/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2026 ஆம் ஆண்டின் போதுள்ளவாறாக, குறைந்த வருமானம் கொண்ட, நடுத்தர வருமானமுடைய, கிராமிய, பெருந்தோட்ட, மற்றும் சேவைகள் முறையாகக் கிட்டாத நகர்ப்புறம் என்ற ரீதியில் வேறாக்கப்பட்ட, உத்தியோகபூர்வ ரீதியாக மதிப்பிடப்பட்ட, தேசிய வீடமைப்புப் பற்றாக்குறையினை வெவ்வேறாகவும்;

(ii) 2026-2029 காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட அலகு விநியோக இலக்கினையும், வீட்டு வகையின் அடிப்படையில் அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட சராசரி நிர்மாணிப்புச் செலவினையும்;

(iii) தேசிய இடைநிலையளவுக் குடும்ப வருமானத்தின் கீழ் உள்ள பயனாளிகளின் விகிதாசாரத்தினையும்;

(iv) தற்போதுள்ள அடைமான வீதங்கள், பணவீக்கம் மற்றும் நிர்மாணிப்புச் செலவுகளின் அதிகரிப்பு என்பவற்றுடன் ஒப்பிட்டு வீடொன்றை நிர்மாணிக்கக் கூடியதாக இருக்கும் தன்மை தரநிலைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(v) பயனாளர்களின் தெரிவில் பிரயோகிக்கப்பட்ட புறவயமான தகுதித் தெரிவடிப்படையினையும் டிஜிட்டல் சரிபார்ப்பினையும்;

(vi) ஒழுங்கீனங்களின் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட, மேன்முறையீடு செய்யப்பட்ட, அல்லது இரத்துச் செய்யப்பட்ட 2024-2025 இன் போதான ஒதுக்கீட்டுத் தீர்மானங்களின் எண்ணிக்கையினையும்;

(vii) அரசியல்மயமாக்கம் மற்றும் இரட்டிப்பு என்பவற்றினைத் தடுப்பதற்காக வெளிப்படைத்தன்மையுடைய, பகிரங்கமாக அணுகத்தக்க பயனாளர் பதிவேடு காணப்படுகின்றதா என்பதையும்;

(viii) நடுத்தர வகுப்பு வீடமைப்புத் திட்டமொன்று அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ix) அவ்வாறாயின், அதன் அமைவிடம் மற்றும் எதிர்பார்க்கப்படும் பூர்த்தியாக்கல் திகதி என்பவற்றினையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

2000/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அல்லது தொடர்புடைய நகர புத்துயிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் தற்போது குடியிருப்பாளர்களைக் கொண்டுள்ள அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட உயர் மாடி வீட்டுத்தொகுதிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய வீட்டுத்தொகுதிகளில் பொருத்தப்பட்ட, தற்போது செயலிழந்துள்ள மின்னுயர்த்திகளின் மொத்த எண்ணிக்கையினையும், 2025 ஆம் ஆண்டின் போது ஒரு மின்னுயர்த்தி செயலிழந்திருந்த சராசரி நேரத்தையும்;

(iii) 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான மொத்தப் பராமரிப்பு ஒதுக்கீட்டையும் மற்றும் ஒவ்வோர் ஆண்டிலும் உண்மையாகப் பயன்படுத்தப்பட்ட தொகையையும்;

(iv) பாராமரிப்புக்கான ஒப்பந்தங்கள் ஒரு போட்டிப் பெறுகைச் செயன்முறையூடாக வழங்கப்பட்டதா மற்றும் செயலாற்றுகையின்மை காரணமாக அத்தகைய ஏதேனும் ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டதா என்பதையும்;

(v) 2023 ஆம் ஆண்டிலிருந்து சுயாதீனக் கட்டமைப்பு மற்றும் தீயணைப்புப் பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், கண்டயறிப்பட்டவைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(vii) நீண்ட காலப்பகுதிக்கு மின்னுயர்த்திகள் செயலிழந்திருக்கும் போது முதியோர் மற்றும் வலது குறைந்தோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள அவசரகால நடவடிக்கைகள் பற்றியும்;

(viii) ஏதேனும் கட்டிடம் பாதுகாப்பற்றதென்றோ, பகுதியளவில் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளதென்றோ அல்லது அவசர முதன்மைப் புனரமைப்பு தேவைப்பட்டுள்ளதென்றோ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2003/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 2025 டிசம்பர் 31 வரை நிர்மாணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை கொழும்பு மாநகர சபையெல்லைக்குள்ளும் மற்றும் நாடு தழுவிய ரீதியிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட பயனாளர்களில் சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்ட மற்றும் பதிவு செய்யக்கூடிய அறுதியுறுதிப்பத்திரங்கள் அல்லது உரிமை மாற்றும் ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தகைய பயனாளிகளின் எண்ணிக்கை கருத்திட்ட வாரியாகவும் ஒவ்வொரு மாவட்ட வாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) உறுதிப்பத்திரங்களை வழங்குவதைத் தடுக்கும் துல்லியமான சட்டக் குறைபாடுகள், நில அளவைக் குறைபாடுகள், காணி சுவீகரிப்பு அல்லது ஆவணக் குறைபாடுகள் யாவை என்பதையும்;

(v) கடந்த 03 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள கோப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலுவையிலுள்ள உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக, மாதாந்த இலக்குகளை உள்ளடக்கிய காலவரையறையுடன் கூடிய வேலைத்திட்டம் ஏதேனும் உண்டா என்பதையும்;

(vii) குடிமக்களின் சொத்து உரிமைகளைப் பாதிக்கும் நீண்டகாலத் தாமதங்கள் தொடர்பில் எவரேனும் உத்தியோகத்தர் மீது அல்லது ஏதேனும் நிறுவனத்தின் மீது பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2057/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் —

(i) சிங்களம், தமிழ் (தாய் மொழியாக) மற்றும் ஆங்கிலம் (இரண்டாம் மொழியாக) ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(ii) அப்பாடங்களில் சித்தியடையாத பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(iii) மேலே (ii)இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை, மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையின் சதவீதமாக;

ஒவ்வொரு பாட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் பாடசாலைகளில் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2058/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் —

(i) பதிவாகியுள்ள குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குழந்தைப் பிறப்பு எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிநிலை ஒவ்வொரு வருடத்துடன் ஒப்பிடுகையில் சதவீதமாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில் கண்டறியப்பட்டுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கையில் பேணிச்செல்லப்பட வேண்டிய உகந்தப் பெறுமானம் யாதென்பதையும்;

(iii) பிறப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, குழந்தைகளை எதிர்பார்க்கும் குடும்பங்களுக்கு ஏதேனும் நிவாரணம் அல்லது சலுகைகள் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2059/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் —

(i) பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(ii) அப்பாடங்களில் சித்தியடையாத பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை, மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் சதவீதமாக;

ஒவ்வொரு பாட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் பாடசாலைகளில் சமயக் கல்வியை மேம்படுத்துவதற்காக எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2084/2026

கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் ஏனைய பிரயோகிக்கத்தக்க சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் ஜா-எல நகர சபை, ஜா-எல தண்டுகம் பெரும பிரதேச சபை, மினுவாங்கொடை நகர சபை, கட்டுநாயக்க-சீதுவ நகர சபை, நீர்கொழும்பு மாநகர சபை, கடான பிரதேச சபை மற்றும் கம்பஹா மாநகர சபை ஆகிய ஆளுகைப் பிரதேசங்களுக்குள் அமுலிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஒவ்வொரு திட்டத்தினதும் பெயர், சட்ட ரீதியான அடிப்படை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி யாவை என்பதையும்;

(iii) அத்தகைய திட்டங்களின் பிரதிகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iv) அப்பிரதேசங்களுக்காக வரைவு அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் தற்போதைய நிலைமை மற்றும் அத்தகைய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகாரசபை யாதென்பதையும்;

(vi) அவற்றின் பிரதிகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(vii) வலயமாக்கும் திட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் (அங்கீகரிக்கப்பட்ட, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அல்லது வரைவு வடிவத்திலான) ஏதேனும் அப்பிரதேசங்களுக்குப் பிரயோகிக்கத்தக்கதாக உள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அவற்றின் சட்ட ரீதியான அதிகாரம் மற்றும் அங்கீகார நிலைமை யாதென்பதையும்;

(ix) அவற்றின் பிரதிகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?